**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No. 82 /2020 PW .2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கோபால் | தந்தை/கணவர் பெயர்: சொக்கலிங்கம் | |
| ஊர் | : | தாலுகா | : |
| வயது | : | தொழில் | : |
| ஜாதி | : | சமயம் | : இந்து |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 29.04.2026

---

**(1,2 எதிரிகள் ஆஜர்)**

**<u>29.04.2026 முதல் விசாரணை:</u>**

**1.** நான் தற்போது முறையூரில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **( அந்த கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ–2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** மேற்படி கையொப்பத்தை காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன். இரவிசந்திரனின் தோப்பில் ஊன்றிருந்த கல்கால்களை ராஜா என்பவர் உடைத்து விட்டதாகவும், அதனை வந்து பார்க்குமாறு ரவிசந்திரன் என்னிடம் கூறினார். மற்ற விவரங்கள் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை .

**<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக மாற்ற அனுமதி கோரி அனுமதிக்கப்படுகிறது.</u>**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

2. உடைந்து கிடந்த கல்கால்களை நான் சென்று பார்த்தேன் என்றால் சரிதான். போலீசார் வந்து பார்த்தார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கடந்த 19.03.2019ம் தேதி மதியம் 01.00 மணிக்கு வையாபுரி மகன் சொக்கலிங்கமும், நானும் மாதவன்ராயன்பட்டி மெயின் ரோட்டிற்கு செல்லும் மண்பாதையில் உள்ள அ.சா1யின் தென்னைத்தோப்பு அருகே இருந்த போது போலீசார் அங்கே நடந்த கல்கால்களை சேதப்படுத்திய வழக்கு சம்மந்தமாக எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதற்க சாட்சியாக நானும், சொக்கலிங்கமும் கையொப்பம் செய்தோம் என்று போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம்

அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1 வது எதிரி எனக்க மாப்பிள்ளை முறை ஆவார். 2 வது எதிரி எனக்கு மாமா முறை ஆவார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

3. காவல் நிலையத்தில் வைத்து நான் மட்டும் தான் கையொப்பம் செய்தேன். கையொப்பம் செய்வதற்காக என்னை அ.சா 1 காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றார்.